[14th March 1958

இனிமேலாவது சரியான முறையில் பரிசீலனை செய்து கொடுப்பதற்கு சர்க்கார் ஏற்பாடு செய்யுமா ? அதேபோன்று ஜில்லாக்களுக்கு ஒதுக்கக்கூடிய பணத்தை செலவழிக்காமல் இனிமேல் வைக்காது, அந்தந்த ஜில்லாவுக்கு ஒதுக்கப்படுகிற பணம் அந்த ஜில்லாவிலேயே செலவழிப்பதற்கு ஏற்பாடு செய்வார்களா ?

THE HON SRI M. BHAKTAVATSALAM : கனம் அங்கத்தினர்களுக்கு நான் இனிமேல் ஒதுக்கப்படுகிற பணத்தை விண்ணப்பம் சரியாக இல்லாது இருந்தும் விநியோகித்து விடுகிறோம் என்று சொல்லமுடியாது.

SRI V. SANKARAN : செலவழிக்கப்படாத பணம் அடுத்த வருஷத் தொகையோடு சேர்த்து அந்தந்த ஜில்லாவிலேயே கொடுக்கப்படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ராஜ்யத்தைப் பொறுத்த வரையில் பணம் பூராவும் செலவழிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னேன். அடுத்த வருஷத்தில் எவ்வளவு பேருக்கு வேண்டுமோ அவ்வளவு பேருக்கு அளிக்கப்படுகிறது.

Urea

* 322 *Q.*—SRI S. LAZAR : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the Agricultural Department have been recommending the use of ' Urea ' (fertiliser) during the current year;

(*b*) the merits and demerits of Urea as compared with ammonium sulphate;

(*c*) the steps taken by the Government to popularise the use of fertiliser Urea; and

(*d*) whether the Government have issued instructions to the distributors of ammonium sulphate that purchasers of ammonium sulphate should be compelled to purchase a fixed proportion of Urea?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) to (*d*) A statement[a] is placed on the table of the House.

SRI S. LAZAR : மற்ற இடங்களைப் பற்றி எனக்குத் தெரியாது. திரிச்சிராப்பள்ளி ஜில்லாவில் அமோனியம் சல்பேட்டை வாங்கும்போது யூரியாவையும் வாங்கும்படியாக நிர்பந்திக்கப்படுவதாக அரசாங்கத்திற்குப் புகார் வந்திருக்கிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அப்படி நிர்ப்பந்திக்கப் படுவதாக இருந்தாலும் யூரியா வாங்குவதனல் விவசாயிகள் பாதிக்கப்பட மாட்டார்கள்.

Road Inspectors

* 324 *Q.*—SRI M. JAGANNATHAN : Will the Hon. the Minister for Works be pleased to state the number of Harijans among provincialised Road Inspectors in the Highways Department, districtwar?

THE HON. SRI P. KAKKAN : The figures are as follows :—

Name of the district.	Number of Harijan Provincialised Road Inspectors.
Chingleput	4
South Arcot	4
Tanjore	2

[a] Printed as Appendix IV on pages 431–432 infra.